# தேசபக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068    இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:135 ★15.09.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:135 ★15.09.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai






கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர் மு .பிரதாப் இ,ஆ.ப 12/09/2026அன்று புத்தளம் பகுதியில் நடைபெற்ற பறவைகள் கண்காணிப்புநிகழ்ச்சியில்கலந்துகொண்டுபறவைகளைபறக்கவிட்டு பார்வையிட்டார் , உடன் ஊரக வளர்ச்சி முகாமைத் திட்ட இயக்குனர் னு.ஏ,சாய்சரண்ரெட்டிஇ.வ,பமற்றும்மாநகராட்சிஆணையர்ஐஸ்வர்யா இ,ஆ,ப அவர்களும் திரளாக பொதுமக்களும் கலந்து கொண்டார்கள் .

## ‘பெரியார் பிறந்தநாள் விழிப்புணர்வு பேரணிக்கு அனுமதி மறுப்பதா?’ தினகரன் கண்டனம்

“பெரியார் பிறந்தநாள் விழிப்புணர்வு பேரணிக்கு அனுமதி மறுப்பதா? அரசியலுக்காக பெரியாரை தங்களது கொள்கைத் தலைவர் எனதவெக போடும் நாடகம் அம்பலமாகி உள்ளது” என அமமுக பொதுச்செயலாலர் டிடிவி தினகரன் காட்டமாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், “பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17ம் தேதி, அவர் பிறந்த ஈரோட்டில் உள்ள பன்னீர்செல்வம் பூங்காவில் இருந்து பெரியார் இருசக்கர வாகனப் பேரணிக்கு அனுமதி மறுத்தும், பெரியார் திடலில் காவல்துறையினரைக் குவித்தும் அடக்குமுறையைக் கையாண்ட தவெக அரசு, தற்போது அவரது பிறந்தநாளைமுன்னிட்டு திட்டமிடப்பட்டிருந்த விழிப்புணர்வு பேரணிக்கும் அனுமதி மறுத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

சமூக நீதி, சுய மரியாதை, பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம் எனப் பல்வேறு கொள்கைகளுக்காகத் தனது வாழ்நாள் முழுவதும் போராடிய தந்தை பெரியார் யுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பெரியாரின் பிறந்தநாளை யொட்டி நடைபெறும் விழிப்புணர்வு பேரணிக்கு, இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களை காரணம் காட்டி அனுமதி மறுத்திருப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

எனவே, பெரியாரை கொள்கைத் தலைவராக முன்மொழிந்திருக்கும் தவெக, அவரையும் அவரது பெயரையும் வெறும் அரசியலுக்காக மட்டுமே பயன்படுத்தும் நாடகத்தைக் கைவிட்டு,



இல்லம் வரை திராவிடர் கழகம் சார்பில் திட்டமிடப்பட்டிருந்த விழிப்புணர்வு பேரணிக்கு காவல்துறை அனுமதி மறுத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே, கடந்த ஜூலை மாதம் நீட் தேர்வுக்கு எதிராக திராவிடர் கழகம் நடத்தவிருந்த யாரின் பிறந்த நாளில், அவரது சொந்த மண்ணிலேயே அவரது கொள்கைகளை வலியுறுத்தி நடத்தப்படவிருந்த பேரணிக்கு அனுமதி மறுத்திருப்பதன்

மூலம், பெரியாரை அரசியலுக்காக மட்டுமே தவெகதனது கொள்கைத் தலைவராக முன்வைத்திருப்பது அம்பலமாகி பெரியாரின் பிறந்தநாளன்று திராவிடர் கழகம் திட்டமிட்டிருந்த விழிப்புணர்வு பேரணிக்கு உடனடியாக அனுமதி வழங்கி, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டும் என்று இந்நேரத்தில் வலியுறுத்துகிறேன்” என்று டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

### அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு

# 180 காவல்துறையினருக்கு பதக்கம்; அரசு அறிவிப்பு

அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு 180 தமிழக காவல்துறை, சீருடை அலுவலர்கள், சார்நிலை அலுவலர்களுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்க முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “தமிழ் நாட்டில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை, ஊர்க்காவல் படை, விரல்ரேகைக் கூடம் மற்றும் தடய அறிவியல் துறைகளில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்களின் சிறப்பான பணிகளை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ம் நாள் தமிழக முதல்வரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில், தலைமைக் காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 138 நபர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில், தீயணைப்பு வீரர் முதல் துணை இயக்குநர் வரையிலான 20 நபர்களுக்கும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள்துறையில், முதல் நிலை சிறைக்காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான 10 நபர்களுக்கும், ஊர்க்காவல் படையில், ஊர்க்காவல் படைவீரர் முதல் படைத் தளபதி வரையிலான 5 நபர்களுக்கும்,

விரல்ரேகைப் பிரிவில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கும், தடய அறிவியல் துறையில் 4 அலுவலர்களுக்கும் அவர்களின் மெச்சத்தக்க பணியினை அங்கீகரிக்கும் வகையில் “மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அண்ணா சிறப்புப் பதக்கங்கள்” வழங்கிட முதல்வர் விஜய் ஆணையிட்டுள்ளார்.



மேலும், 19.05.2026 அன்று காலை சுமார் 09.45 மணியளவில், நாகர்கோவில் லெமூரியா கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த கணபதிபுரத்தைச் சேர்ந்த இரு குழந்தைகள் ராட்சத கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு, அதில் 9 வயதுடைய வைஷ்ணவி என்ற சிறுமியை மட்டும் பொதுமக்கள் காப்பாற்றிய நிலையில், 9 வயதுடைய சிறுவன் சைலேஷ் கடலுக்குள் சுமார் 100 மீட்டர் தொலைவில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான்.

இந்நிலையில், தனது இரவுப் பணியை முடித்துவிட்டு, வீடு திரும்பி கொண்டிருந்த நாகர்கோவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தைச் சேர்ந்த தீயணைப்பு ஓட்டுநர் ஆர். ராஜசேகர் மேற்படி தகவலை கேள்விப்பட்டவுடன் ராஜாக்க மங்கலம் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்து விட்டு, உடனடியாக கடற்கரைக்கு விரைந்து சென்று அங்கிருந்த உயிர்காக்கும் மிதவையை பயன்படுத்தி, தன் சொந்த பாதுகாப்பை பற்றி கவலைப்படாமல், கடலில் நீந்தி சென்று அச்சிறுவனை மீட்டுக் கரைக்கு கொண்டு வந்து அச்சிறுவனின் உயிரை காப்பாற்றினார்.

கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர், ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் அன்னாரது துணிச்சலான செயலை வெகுவாக பாராட்டியுள்ளார்கள். இவரின் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு செயலை பாராட்டி இவருக்கு ”தமிழக முதலமைச்சரின் தீயணைப்பு பணிக்கான அண்ணா வீரதீர பதக்கம்” வழங்கிட முதல்வர் விஜய் ஆணையிட்டுள்ளார். மேற்கண்ட பதக்கங்கள், முதல்வர் விஜய்யால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆன் லைனில் பத்திரங்கள் பதிவு செய்யும் முறைக்கு வரவேற்பு

## இதுவரை 300க்கும் மேற்பட்ட பத்திரங்கள் பதிவாகின


கடலூர் மாவட்டத்தில் ஆன்லைனில் கிரையப் பத்திரங்கள் பதிவு செய்யும் நடைமுறை, பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

பத்திரப்பதிவுத்துறையில் ஆவணப்பதிவு நடைமுறைகளை எளிமைப்படுத்த பொதுமக்கள் தாங்களே நேரடியாக ஆன்லைனில் (இணைய வழியில்) ஆவணங்களை பதிவு செய்யும் முறையினை அறிவித்துள்ளது. ஏற்கனவே ஆன்லைனில் ஈ.சி., போன்ற சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடைமுறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தவும், பொது மக்களுக்கு எளிதான சேவை கிடைக்கவும் நேரில் வருகையற்ற பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 17 ம் தேதி முதல் இந்த புதிய முறை அமலுக்கு வந்துள்ளது.

இந்த முறையில் பொது மக்கள் சார்பதிவாளர் அலுவலகம் வராம



லேயே மனைப்பிரிவில் முதல் மனை விற்பனை மற்றும் அடுக்குமாடி குடியிருப்பில் முதல்வீடு விற்பனை ஆகிய ஆவணங்களை தற்போது ஆன்லைனில் பத்திரப்பதிவு செய்யலாம்.

மேலும் வங்கியாளர்கள் தனியார் வீடு, மனை, நிலம் போன்றவற்றை வங்கிக்கு முதன் முதலில் அடமானம் வைப்பதற்காக இணையத்தில் பதிவு செய்யலாம்.

இணையதளத்தில் கட்டுமான நிறுவனங்கள் மற்றும் நில விற்பனையாளர்கள் தங்களே உருவாக்கி மேற்படி ஆவணங்களை ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம்.

ஆவணத்தை எழுதிக் கொப்பவர்கள், எழுதிப் பெறுபவர்கள் மற்றும் சாட்சிகள் விபரங்கள் மற்றும் ஆதார் அட்டை போன்றவற்றை அப்லோடு செய்ய வேண்டும். ஆவணதாரர்கள் மற்றும் சாட்சிகளின் போட்டோ எடுக்கப்பட்டு கைரேகை அல்லது கருவிழிப்படலம் வழி ஆதார் சரிபாக்கப்பட வேண்டும்.

ஆன்லைனில் கிரையப் பத்திரங்கள் பதிவு செய்யும் நடைமுறை கட்டணம்செலுத்திஇணைய வழியிலேயே சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் செல்லாமல் ஆவணத்தை தாக்கல் செய்யலாம். இதில் ஏதேனும் கூடுதல் தகவல் தேவைப்படின் சார்பதிவாளர் இணையவழியில் கேட்கும் கேள்விகளுக்கு 30 நாட்களுக்குள் பதிலளிக்கலாம்.

ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட அன்றே அல்லது அடுத்த அலுவலக நாளுக்குள் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மற்றும் கட்டண ரசீது தொடர்புடைய சார்பதிவாளரின் மின்கையொப்பத்துடன் ஆவணதாரருக்கு ஆன்லைனில் கிரையப் பத்திரங்கள் பதிவு செய்யும் நடைமுறை அனுப்பி வைக்கப்படும்.

கடலூர் மாவட்டத்தில் கடலூர், சிதம்பரம், விருத்தாசலம் ஆகிய 3 பதிவு மாவட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு பதிவு மாவட்டத்திலும் 11 சப் ரிஜிஸ்டார் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. வருவாய் மாவட்டம் முழுவதும் 33 அலுவலகங்கள் உள்ளன. தற்போது ஆன்லைனில் கிரையப் பத்திரங்கள் பதிவு செய்யும் நடைமுறை வந்த பின்னர்கடலூர்பதிவுமாவட்டத்தில் 300 பத்திரங்கள் ஆன்லைனில் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வங்கியாளர்கள், மனைப்பிரிவில் ஈடுபட்டுள்ளவர்கள், பொதுமக்கள்இந்தநடைமுறையை வரவேற்றுள்ளனர்.

இதனால் வரும் காலத்தில் அதிகளவு பத்திரப்பதிவு இப்புதிய முறையில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மதுரையில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படும் விவசாயிகள் ரசீது இங்கே; பணம் எங்கே

விக்கிரமங்கலத்தில் கொள்முதல் செய்த நெல்லுக்கு பணம் தராமல் இழுத்தடிப்பதாக அதிகாரிகள் மீது விவசாயிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

இங்கு 2 மாதங்களுக்கு முன் செக்கானுாரணி ரோட்டில் நெல் கொள்முதல் மையம் திறக்கப்பட்டது.

விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை கொடுத்து பணம் பெற்று வந்தனர்.

திடீரென ஆய்வு செய்த வணிகப்பிரிவு பொது மேலாளர், விவசாயிகளின் நெல்லை வியாபாரிகளின் நெல் எனக் கூறி சில ஆவணங்களை எடுத்துச் சென்றார். அதன் பின் கொள்முதல் செய்ததற்கு ரசீது பெற்ற விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பணம் வரவு வைக்கப்படவில்லை.

விவசாயி மோகன்கூறி



யதாவது: எங்களுக்கு ரசீது வழங்கி 50 நாட்களுக்கும் மேலாகிறது. விவசாயிகள் பலரிடம் கொள்முதல் செய்த 700க்கும் மேற்பட்ட மூடைகளுக்கு பணம் வரவு வைக்கவில்லை. அதிகாரிகளுக்கு இடையேயான ஈகோ பிரச்னையில் யாரோ கொடுத்த தவறான தகவலால், எங்களுக்குரியதை, 'வியாபாரிகளின் நெல்' என அதிகாரிகள் கூறுகின்றனர். நாங்கள் பயிரிட்டதற்கு ஆதாரங்களை வைத்துள்ளோம்.

அலுவலகங்களுக்கு அலைந்து,

திரிந்து சப் கலெக்டர், மண்டல மேலாளர், கலெக்டரிடம் மனு கொடுத்தும் நடவடிக்கை இல்லை. சாகுபடிக்காக கடன் வாங்கி, அதிக வட்டி செலுத்துகிறோம். அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# கம்பத்தில் அதிநவீன சி.என்.ஆர். காம்ப்ளக்ஸ் மற்றும் திருமண மண்டபம் கோலாகல திறப்பு விழா

கம்பம், செப். 15

கம்பம் எல்.எப். சாலையில் அமைந்துள்ள அதிநவீன சி.என்.ஆர். காம்ப்ளக்ஸ், ரெசிடன்சி மற்றும் திருமண மண்டபத்தின் திறப்பு விழா நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. புதிய திருமண மண்டபத்தை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன் மற்றும் ஆர். ஆர். இன்டர்நேஷனல் பள்ளியின்சேர்மன்ராஜாங்கம் ஆகியோர் குத்துவிளக்கேற்றி, நாடா காவல் தலைவர் குமரேசன், சி.பி.யூ. பள்ளி தாளாளர் திருமலை சுதாகரன், நகர் தி.மு.க. செயலாளர்கள் வீரபாண்டியன், பால்பாண்டி ராஜா மற்றும் தொழிலதிபர்கள் முத்துராமலிங்கம், தர்மலிங்கம்,



இவ்விழாவிற்கு நிறுவனத்தின் உரிமையாளர் நாகராஜன் தலைமை தாங்கினார். நாகரத்தினம் முன்னிலை வகிக்க, நிர்வாக இயக்குநர்கள் பாலகுருநாதன் மற்றும் நிவேதா ஆகியோர் வந்திருந்த சிறப்பு விருந்தினர்களை வரவேற்று மகிழ்ந்தனர். வெட்டி முறைப்படி திறந்து வைத்தனர். இவ்விழாவில் கம்பம் நகராட்சி தலைவர் வனிதா, வழக்கறிஞர் நெப்போலியன், முன்னாள் நகராட்சி தலைவர்கள் ராஜமணி, சிவக்குமார், இளங்கோவன், விவசாய சங்க தலைவர் நாராயணன், பரவு பரமானந்தம் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு வாழ்த்து தெரிவித்தனர். விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அனுமந்தன்பட்டி அ.தி.மு.க. செயலாளர் மார்க்கண்டன் திறம்பட ஒருங்கிணைத்து நடாத்தினார்.





# செய்யாறு தூய வியாகுல அன்னை ஆலயத்தில் 81 ம் ஆண்டு பெருவிழாவை தேரோட்டம்

செய்யாறு,செப்.15

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் தூய வியாகுல அன்னை தேவாயத்தில் 81வது ஆண்டின் ஆண்டு பெருவிழா நிகழ்ச்சி கொடி ஏற்றத்துடன் தொடங்கி 4 நாட்கள் நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் ஆற்காடு சாலையில் உள்ளதூய வியாகுல அன்னை தேவாயத்தின் 81 வது ஆண்டு பெருவிழா பேரருட்தந்தை, முனைவர் D. அருள் ஜான்போஸ்கோ இயக்குனர்CPC, வேலூர் மறைமாவட்டம் தலைமையில் அருட்பணி ஏ.சுதர்சன் முன்னிலையில் வியாகுல அன்னை தேரோட்டம் ஆலயத்தை சுற்றி காந்தி சாலை மற்றும் ஆற்காடு சாலையில் வளம் வந்தது மங்கல இசையுடன் வான வேடிக்கையுடன் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து தேவாலயத்தில் கூட்டுத் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. 4வது நாள் திருவிழா திருப்பலி நற்கருணை தேர்பவனி கொடி இறக்கம் நடைபெறுகிறது. நிகழ்ச்சியில் ஏராளமான பங்கு இறை மக்கள் பங்கு பேரவை உறுப்பினர்கள் இளைஞர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்று தூய வியாகுல அன்னையை தரிசித்து சென்றனர்.



# பாடியநல்லூர் சிவன் கோயில் நிர்வாகிகள், இளைஞரணி சார்பில் விநாயகர் சதுர்த்தி விழா

செங்குன்றம், செப்டம்பர் 15:

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சியில் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு பாடியநல்லூர் சிவன் கோயில் நிர்வாகிகள், ஆலய இளைஞரணி சார்பில் சிவன் கோயில் நிர்வாக செயலாளர் சரவணன் மற்றும் ஆலய இளைஞரணி ஏற்பாட்டில் 10 அடி உயர விநாயகர் சிலை வைத்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விநாயகருக்கு மகா தீபாராதனையுடன் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு பின்னர் பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது.




# சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு வெளிநாட்டில் முதுகலைப்படிப்பு பயில்வதற்கு கல்வி உதவித்தொகை மாவட்ட ஆட்சியர்

ராணிப்பேட்டை செப்.15

தமிழ்நாடு அரசு 2026 2027ஆம் ஆண்டில் முஸ்லீம் சிறுபான்மையின மாணவ /மாணவியர்கள் உயர்தர உலகளாவிய கல்வி வாய்ப்புகளை வழங்க ஏதுவாக வெளி நாடு சென்று படிக்கும் 10 முஸ்லிம் மாணவர்களுக்கு. ஒரு மாணவருக்கு அதிகபட்சமாக ரூ.36 இலட்சம் வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 20262027ஆம் ஆண்டில் வெளிநாட்டில் முதுகலைப் படிப்பு பயில உள்ள சிறுபான்மையின முஸ்லீம் மாணவ, மாணவியர்களிடமிருந்து கல்வி உதவித்தொகை வழங்கும் விண்ணப்பங்கள்வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர்கள் 20262027 ஆம் கல்வியாண்டில் முதுகலை பட்டப்படிப்பு படிக்க உலகளாவிய QS (குவாக்கரெல்லி சைமண்டஸ்) தரவரிசையில் முதல் 250 இடங்களுக்குள் உள்ள பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்களிடமிருந்து நிபந்தனையற்ற சேர்க்கை கடிதம் (Unconditional Offer Letter) பெற்றிருக்க வேண்டும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.8 இலட்சத்துக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். பட்டப்படிப்பில் 60% அல்லது அதற்கு இணையாக தேர்ச்சி சதவீதம் பெற்றிருக்க வேண்டும். மருத்துவம், பொறியியல், மேலாண்மை. அறிவியல், வணிகவியல் & நிதி. மனிதநேயம் & கலை. வேளாண்மை அறிவியல் சுகாதாரம் பயன்பாட்டு அறிவியல், சர்வதேச வணிகம், பொருளாதாரம், நிதி கணக்கியல், மனித நேய படிப்புகள் (Humanities) சமூக அறிவியல், நுண்கலைகள் மற்றும் சட்டம் போன்ற பாடப்பிரிவுகளை தேர்தெடுத்து முதுகலைப் பட்டப்படிப்புக்கான சேர்க்கை பெறுபவராக இருத்தல் வேண்டும்மெனமாவட்ட ஆட்சித்தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், தெரிவித்துள்ளார். இத்திட்டத்தில் விண்ணப்பிக்க www.bombomw.tn.gov.in/welfschemes_minorities.htm என்ற இணையதளத்தில் விண்ணப்பத்தினைபதிவிறக்கம் செய்து விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் அனுப்ப வேண்டிய முகவரி ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம். முதல் தளம். சேப்பாக்கம், சென்னை 600 005, விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: 15.10.2026.



பழனி மலை கோவிலில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, மலை மேல் உள்ள, ஆனந்த விநாயகர் வெள்ளிக் கவசம் அலங்காரத்தில் உள்ளார்

## திண்டுக்கல்லில் உணவு விடுதியில்

# சாப்பிட்டதற்கு பணம் கொடுப்பதில் தகராறு தடுக்க வந்த ஆட்டோ டிரைவருக்கு மண்டை உடைப்பு

## 3 வாலிபர்கள் கைது

திண்டுக்கல் ரயில் நிலையம் அருகே குமார் என்பவரின் உணவு விடுதியில் தோமையார்புரத்தை சேர்ந்த ஆரோக்கிய தாஸ்(36), ஆரோக்கிய சாமி(35) நரசிங்கபுரத்தை சேர்ந்த ஸ்டீபன்ராஜ்(30) ஆகியோர் சாப்பிட்டு விட்டு உரிமையாளர் குமாரிடம் தகராறில் ஈடுபட்டனர் இதனைத்தொடர்ந்து ஆட்டோ டிரைவர் சந்திரசேகர் என்பவர் தகராறு தடுக்க முற்பட்டார் அப்போது தகராறு ஈடுபட்ட 3 பேரும் சந்திரசேகரை தாக்கி மண்டையை உடைத்தனர்.

இது குறித்து நகர் தெற்கு காவல்நிலைய ஆய்வாளர் இளஞ்செழியன், சார்பு ஆய்வாளர் முத்துக்குமார் மற்றும் போலீசார் விசாரணை மேற்கொண்டு 3 பேரையும் கைது செய்தனர்

# போளூரில் இனி குப்பைகளை தரம் பிரிக்காமல் கொடுத்தால் வாங்கமாட்டோம்

## 4 வகையாக பிரித்து வழங்க நகராட்சி நிர்வாகம் உத்தரவு

சேத்துப்பட்டு, செப்.15:

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் நகராட்சியில்வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை இனி கட்டாயம் 4 வகையாக தரம் பிரித்து வழங்க வேண்டும் என நகராட்சி நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. வருகிற 20ந் தேதிக்கு பிறகு தரம் பிரிக்காமல் வழங்கப்படும் குப்பைகளை தூய்மைப் பணியாளர்கள் பெறமாட்டார்கள் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போளூர் நகராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. இப்பகுதிகளில் தினந்தோறும் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து அதிக அளவில் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை முறையாக கையாள்வதற்கும், பொதுமக்களின் ஒத்துழைப்புடன் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதற்கும் நகராட்சி நிர்வாகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக நகராட்சி ஆணையாளர்பாரத் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

பொதுமக்கள் தங்களது வீடுகள் மற்றும் நிறுவனங்களில் நாள்தோறும் உருவாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி தனித்தனியாகப் பிரித்து வழங்க வேண்டும். அதன்படி, ஈரக்கழிவு, உலர்கழிவு, சுகாதாரக் கழிவு மற்றும் சிறப்பு கவனிப்புக் கழிவு என 4 வகையாக குப்பைகளை பிரித்து, நகராட்சி தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

குப்பைகளை சேகரிக்கும் முன்பே பொதுமக்கள் அவற்றை முறையாக தரம் பிரித்து வைத்திருப்பது அவசியம். இதன் மூலம் மக்கும் கழிவுகள் தனியாக கையாளப்பட்டு உரமாக்குதல் உள்ளிட்ட பணிகளுக்கு பயன்படுத்த முடியும். மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை தனியாக சேகரிப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பையும் குறைக்க முடியும்.

வருகிற 20ந் தேதிக்கு பிறகு, 4 வகையாக தரம் பிரிக்கப்படாமல் வழங்கப்படும் கலப்பு குப்பைகளை குடியிருப்பு மற்றும் வணிகப் பகுதிகளில் இருந்து நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் பெறமாட்டார்கள் என நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும், குப்பைகளை தரம் பிரிக்காமல் பொது இடங்கள், காலியிடங்கள், கால்வாய்கள் உள்ளிட்ட இடங்களில் கொட்டுவது, சாலையோரங்களில் வீசுவது அல்லது குப்பைகளுக்கு தீ வைத்து எரிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி அபராதம் விதிக்கப்படும் என்றும் நகராட்சி நிர்வாகம் எச்சரித்துள்ளது.

குப்பைகளை முறையாக தரம் பிரித்து வழங்குவதன் மூலம் நகரின் தூய்மை பாதுகாக்கப்படுவதுடன், கழிவுகளை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கும். குறிப்பாக, பொதுஇடங்களில் குப்பைகள் தேங்குவது, கால்வாய்களில் அடைப்பு ஏற்படுவது மற்றும் குப்பைகளை எரிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஆகியவற்றைத் தடுக்க முடியும். எனவே, போளூர் நகராட்சிக்கு உட்பட்ட 18 வார்டுகளிலும் வசிக்கும் பொதுமக்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள் நகராட்சியின் அறிவுறுத்தலை கடைப்பிடித்து, குப்பைகளை 4 வகையாக தரம் பிரித்து தூய்மைப் பணியாளர்களிடம் வழங்க வேண்டும் என நகராட்சி ஆணையாளர்பாரத் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அண்ணா பிறந்த நாளையொட்டி திருவண்ணாமலையில் தி.மு.க. பிரமாண்ட ஊர்வலம்

## எ.வ.வேலு தலைமையில் இன்று நடைபெறுகிறது

திருவண்ணாமலை, செப்.15:

முன்னாள் முதலமைச்சர் அண்ணாவின் 118வது பிறந்த நாளையொட்டி, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பிரமாண்ட ஊர்வலம் இன்று நடைபெறுகிறது.

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் திரளாக பங்கேற்க உள்ளனர்.

இதையொட்டி, திருவண்ணாமலை காந்தி சிலை அருகில் இருந்து இன்று காலை 9 மணிக்கு ஊர்வலம்புறப்படுகிறது. முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும் ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக சென்று அண்ணா சிலையை சென்றடைய உள்ளது.

அங்கு அண்ணா சிலைக்கு எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். தொடர்ந்து அண்ணாவின் கொள்கைகள், சமூகநீதி, மாநில உரிமைகள் உள்ளிட்டவற்றை முன்னிறுத்திகட்சிநிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உறுதிமொழி ஏற்பது உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

அண்ணாவின் பிறந்த நாளையொட்டி மாவட்டம் முழுவதும் தி.மு.க. சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, கட்சியின் மூத்த நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை நிர்வாகிகள், இளைஞரணி உள்ளிட்ட பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் ஊர்வலத்தில் பங்கேற்க உள்ளனர்.

ஊர்வலத்தில் கட்சியின் கொள்கைகள் மற்றும் அண்ணாவின் சமூக நீதிக் கொள்கைகளை விளக்கும் பதாகைகள், கட்சி கொடிகள் இடம் பெற உள்ளன.

இதனால் திருவண்ணாமலை நகரில் கட்சி தொண்டர்கள் திரளும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அண்ணாவின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடும் வகையில் நடைபெறும் இந்த ஊர்வலத்தில்தி.மு.க.நிர்வாகிகள், தொண்டர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# பாடியநல்லூர் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி விழா

செங்குன்றம், செப்டம்பர் 15:

சோழவரம் ஊராட்சி ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் 59ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா ஆலய நிர்வாகி சிவா அறக்கட்டளை நிறுவனர் ஓ. கே.பாபு தலைமையில் நடைபெற்றது.

ஆலய நிர்வாகிகள் விஜயரங்கம், சுப்பிரமணி, கோவிந்தரோஜ், மோகன், சாந்தகுமார், எல்லையப்பன், கெங்காதுரை, தனசேகர், ரஜினி குமார், கஜேந்திரன், சம்பத், வேலு, சுமோரவி, பாபு, சுரேஷ், அரிபாபு, வெங்கடேசன், வெங்கட், ஜெயக்குமார், பாண்டியன், மணி, உதயா, சரவணன், சுரேந்திரன், சஞ்சய், சந்தோஷ், வேலு, மணி, ஜீவா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விநாயகர் சதுர்த்தி





விழாவையொட்டி கணபதி ஹோமத்துடன் துவங்கி அருள்மி ஸ்ரீ செல்வ விநாயகருக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும், அர்ச்சனையும், யாகபூஜையும், பல்வேறு சிறப்பு பூஜைகளும் செய்து பழங்கள் மற்றும் இனிப்புகளை படையலிட்டு தூப தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இரவில் திருவீதி உலாவும் நடைபெற்றது. இதில் பாடியநல்லூர் கிராம பொதுமக்கள், மகளிர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

"மின்தடையால் கலையிழந்த விநாயகர் சதுர்த்தி விழா"

## சின்னமனூரில் 6 மணி நேரத்திற்கு மேலாக நீடித்த மின்வெட்டால் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கொந்தளிப்பு

தேனி,செப்.

தேனி மாவட்டம் சின்னமனூர் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று விநாயகர் சதுர்த்தி விழா விமரிசையாக கொண்டாடப்பட்டு வந்த வேளையில், மதிய வேளையில் நிறுத்தப்பட்ட மின்சாரம் இரவு வரை வராததால் நகர் முழுவதும் இருளில் மூழ்கி, பண்டிகை பெரும் கலை இழந்து காணப்பட்டது. நேற்று மதியம் 1 மணி அளவில் துண்டிக்கப்பட்ட மின்சாரம், சுமார் 6 மணி நேரத்திற்கும் மேலாக சீரமைக்கப்படாமல் நீடித்தது அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியது.

கடந்த சில மாதங்களாகவே சின்னமனூர் பகுதியில் மின்சார வாரியத்தினரால் எவ்வித முன் அறிவிப்புமின்றி அடிக்கடி மின்தடை செய்யப்படுவது வழக்கமாக உள்ளது. மின் பாதையில் சிறிய அளவிலான பழுதுகள் ஏற்பட்டு, அவை 15 நிமிடங்களிலோ அல்லது அரை மணி நேரத்திற்குள்ளோ சரிசெய்யப்படும் பட்சத்தில் மக்களுக்கு முன் அறிவிப்பு தேவையில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால், 5 முதல் 6 மணி நேரத்திற்கும் மேலாக நீடிக்கும் இதுபோன்ற நீண்டநேர மின்தடைகளின் போது, மின்சார வாரியம் முறையான முன் அறிவிப்பை சமூக வலைதளங்கள் மூலமாகவோ அல்லது பிற வழிகளிலோ மக்களுக்கு தகவல் கொடுக்கப்பட வேண்டும்.

தொடர்ந்து 3 நாட்கள் விடுமுறை முடிந்து இன்று முதல் பள்ளிகள் திறக்கப்படவுள்ள நிலையில், பள்ளி மாணவர்கள் தங்களின் கல்வி சார்ந்த முன்னேற்பாடுகளை செய்ய முடியாமல் தவித்தனர். மேலும், நீண்ட நேர மின்தடையால் பெரும்பாலான வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் இருந்த யு.பி.எஸ் (UPS) சாதனங்களின் சேமிப்பும் தீர்ந்து செயலிழந்ததால், மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு கூட நீரையும் மின்சாரத்தையும் பயன்படுத்த முடியாமல் கடும் சிரமத்திற்கு ஆளாகினர்.

இதேபோன்று மின்நுகர்வோரின் அவசரதேவைகளுக்காகவும் புகார்களுக்காகவும் உதவி செயற்பொறியாளர் (AEE) (AD) செயற்பொறியாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு அரசு சார்பில் 'சி.யு.ஜி' (CUG) மொபைல் எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தொடர்பு கொள்ளும்போது முறையான தகவல்களை தெரிவிப்பதற்காகவே இந்த எண்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், பெரும்பாலான நேரங்களில் இந்த எண்கள் மொபைல் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டு செயல்படாமலேயே முடக்கி வைக்கப்படுகின்றன. இதனால் மின்தடை குறித்து எந்த அதிகாரியையும் தொடர்பு கொள்ள முடியாமல் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். எந்தவொரு ஆண்டிலும் இல்லாதவாறு, இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருநாளின் தொடக்கநாளிலேயே இத்தகைய நீண்ட நேர மின்தடை ஏற்பட்டதால், பண்டிகையை கொண்டாட காத்திருந்த பக்தர்களும் பொதுமக்களும் மிகுந்த மன உளைச்சலுக்கும் ஏமாற்றத்திற்கும் தள்ளப்பட்டனர். மின்சார வாரியத்தின் இத்தகைய அலட்சியப்போக்கு மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. சின்னமனூர் மக்களின் இந்த அவல நிலையை மின்சார வாரியத்தின் உயர் அதிகாரிகள் உடனடியாக கவனத்தில் கொள்ள வேண்டும். இனி வரும் காலங்களில் அதிக நேரம் நீடிக்கும் மின்தடைகள் ஏற்படும் பட்சத்தில், அதுகுறித்த தகவல்களை முன்னதாகவே பொதுமக்களுக்கு தெரிவிக்கும் நடைமுறையை கட்டாயமாக்க வேண்டும்.

மேலும், பொதுமக்களின் அவசர அழைப்புகளை எதிர்கொள்ளும் வகையில் அரசு வழங்கிய சி.யு.ஜி மொபைல் எண்களை எப்போதும் பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்களும் நகர்வாழ் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.





திண்டுக்கல் செம்பட்டி, ரவுண்டானா அருகே நடந்து வந்தவர் திடீர் என மயங்கி கீழே விழுந்து சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லும் வழியில் இறந்து விட்டார்.இவரைப் பற்றி தகவல் தெரிந்தால் அருகில் உள்ள காவல் நிலையம் அல்லது செம்பட்டி காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளும்

## பாடியநல்லூர் பாலாஜி நகர் தாண்டவம் பாய்ஸ் சார்பில் 11ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா

செங்குன்றம், செப்டம்பர் 15:

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் பாலாஜி நகர் தாண்டவம் பாய்ஸ் சார்பில் அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் 11ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா மன்ற நிர்வாகிகள் எம்.தனசேகர், வி.மணிகண்டன், கே.வடிவேல், கே.சிவா, எஸ்.அருண், ஆர்.பாபு, பி.சரத்குமார், மன்ற உறுப்பினர்கள் ஆர்.ராம், ஆர்.சந்தோஷ், எம்.விக்னேஷ், ஆர்.சஞ்சய், எஸ்.திலிப்குமார், பி.ராம் ஆகியோர் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.


கேஆர்வி கல்வி அறக்கட்டளை நிறுவனர் கே.ஆர். வெங்கடேசன் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு கேக் வெட்டி, சிறப்பு பூஜைகளை தொடங்கி வைத்தார்.





முன்னதாக மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

சதுர்த்தி விழாவையொட்டி கணபதி ஹோமத்துடன் துவங்கி 10 அடி உயர ஸ்ரீ செல்வ விநாயகரை பிரதிஷ்டை செய்து விசேஷ அர்ச்சனை, ஆராதனைகள், பல்வேறு சிறப்பு பூஜைகள் செய்து பழங்கள் மற்றும் இனிப்புகளை படையலிட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.


இராணிப்பேட்டை மாவட்டம் வேப்பூர் பாலகுஜா அம்பிகை சமேத வசிஷ்டேஸ்வரர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி பூஜை மிகவும் சிறப்புமாக நடைபெற்றது

## அண்ணா பிறந்தநாளில் திருவண்ணாமலையில் அதிமுக மாபெரும் பொதுக்கூட்டம்

திருவண்ணாமலை, செப்.15

பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்தநாளையொட்டி, திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

அதன்படி, செப்டம்பர் 15ஆம் தேதி காலை 9 மணிக்கு திருவண்ணாமலையில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

தொடர்ந்து, அதே நாளில் மாலை 6 மணிக்கு அண்ணா சிலை அருகே அதிமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சிகளில் திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பல்வேறு அணி நிர்வாகிகள், கிளை மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

மேலும், முன்னாள் மற்றும் இந்நாள் உள்ளாட்சி நிர்வாகிகள், முன்னாள் கூட்டுறவு சங்க நிர்வாகிகள், கழகத்தின் அனைத்து நிலை பொறுப்பாளர்கள் மற்றும் அதிமுக தொண்டர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டு அண்ணாவின் பிறந்தநாள் விழாவை சிறப்பிக்க வேண்டும் என திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட அதிமுக சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அண்ணாவின் கொள்கைகள், சமூகநீதி, ஏழை எளிய மக்களுக்கான நலத்திட்டங்கள் மற்றும் தமிழக அரசியல் வரலாற்றில் அவரது பங்களிப்பை நினைவு கூரும் வகையில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.



### திண்டுக்கல்லை அடுத்த ரெட்டியார்சத்திரம் அருகே இடித்தாக்கி ஒடிசாவை சேர்ந்த சோனு ராம் கோன்ட் (25) என்ற இளைஞர் உயிரிழப்பு மேற்படி சம்பவம் குறித்து ரெட்டியார்சத்திரம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

திருவண்ணாமலை மாவட்டத்தில்

## 1,200 இடங்களில் விநாயகர் சிலைகள்; 1,500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில்

திருவண்ணாமலை, செப். 15

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் 1,200 இடங்களில் விநாயகர் சிலைகள் வைக்க போலீசார் அனுமதி வழங்கியுள்ளனர். இதையடுத்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, பா.ஜ.க., இந்து முன்னணி உள்ளிட்ட பல்வேறு இந்து அமைப்புகள் மற்றும் இளைஞர் குழுக்கள் சார்பில் ஆண்டுதோறும் விநாயகர் சிலைகள் வைத்து வழிபாடு நடத்துவது வழக்கம். விழா நிறைவடைந்த பின்னர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அரசு அனுமதித்துள்ள நீர்நிலைகளில் கரைக்கப்படும்.

இந்த ஆண்டும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விநாயகர் சிலைகள் வைப்பதற்காக சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் அமைப்புகள் மற்றும் விழாக்குழுவினர் முறையாக விண்ணப்பித்திருந்தனர். போலீசார் ஆய்வு செய்து, விதிமுறைகளுக்கு உட்பட்டு மாவட்டம் முழுவதும் சுமார் 1,200 இடங்களில் சிலைகள் வைக்க அனுமதி வழங்கியுள்ளனர்.

அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து, சிலைகள் வைக்கப்பட்ட இடங்களில் பந்தல்கள் அமைத்தல், மின் விளக்குகள் பொருத்துதல் உள்ளிட்ட ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு பகுதிகளில் இளைஞர்கள் மற்றும் விழாக்குழுவினர் வாகனங்களில் விநாயகர் சிலைகளை கொண்டு சென்று பிரதிஷ்டை செய்தனர். விநாயகர் சதுர்த்தி நாளான நேற்று, மாவட்டம் முழுவதும் உள்ள விநாயகர் கோவில்கள் மற்றும் சிலை வைக்கப்பட்டுள்ள பகுதிகளில் சிறப்பு பூஜைகள், அபிஷேகங்கள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விநாயகரை வழிபட்டனர்.

இதையொட்டி, சிலைகள் வைக்கப்பட்டுள்ள பகுதிகள், முக்கிய சாலைகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உதயகுமார் தலைமையில் 1,500க்கும் மேற்பட்ட போலீசார் மாவட்டம் முழுவதும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், விநாயகர் சிலைகள் ஊர்வலம் நடைபெறும் வழித்தடங்கள், முக்கிய சந்திப்புகள் மற்றும் பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் கூடுதல் போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும், ஊர்வலங்கள் அமைதியாக நடைபெறுவதை உறுதி செய்யவும் போலீசார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் போது அரசின் விதிமுறைகள் மற்றும் காவல்துறை அறிவுறுத்தல்களை விழாக்குழுவினர் மற்றும் பொதுமக்கள் முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என போலீசார் அறிவுறுத்தியுள்ளனர். விழாவை அமைதியாகவும், பாதுகாப்பாகவும் கொண்டாடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு

## தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் முன்பு அமைந்துள்ள ஸ்ரீ போத்தி விநாயகர் கோவிலின் சார்பில் 10.000 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

### மேயர் என் பெ, ஜெகன் பெரியசாமி முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் ஆகியோர் துவக்கி வைத்தனர்

தூத்துக்குடி,செப்.15

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் முன்பு அமைந்துள்ள ஸ்ரீ போத்தி விநாயகர் கோவிலின் சார்பில் 10.000 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை மேயர் என் பெ, ஜெகன் பெரியசாமி முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் ஆகியோர் துவக்கி வைத்தனர்





தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் முன்பு முன்னாள் தூத்துக்குடி சட்டமன்ற திமுக உறுப்பினர் எனபெரியசாமி எக்ஸ்,எம் எல்ஏவால் அமைக்கப்பட்ட ஸ்ரீ போத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேக வழிபாட்டுக்கு பின் மதியம் 10.000 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை மேயர் என் பெ,ஜெகன் பெரியசாமி, முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன், நாம் இந்தியர் கட்சித் தலைவர் என் பெ, ராஜா பெரியசாமி, ஆகியோர் துவக்கி வைத்தனர், இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் முத்துச்செல்வம், ராஜா மணி, ரவீந்திரன், மேயர் உதவியாளர்கள் பிரபாகர், ஜேஸ்பர், ரமேஷ், பேச்சி முத்து, பெருமாள் கோவில் அருகாவலர் குழு தலைவர் செந்தில்குமார், நெடுஞ்சாலைத்துறை மணி, உட்பட ஏராளமானோர் இன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்


விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பழனி ரயில்வே பீடர் சாலையில் உள்ள பிரசன்ன விநாயகர் கோயிலில் விநாயகருக்கு வெள்ளி கலசம் அணிவித்து சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் பழனி சட்டமன்ற உறுப்பினர் K.ரவி மனோகரன் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து பக்தர்களுக்கான அன்னதானத்தையும் தொடங்கி வைத்தார் உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

### சேத்துப்பட்டு அருகே பட்டப்பகலில் துணிகர கொள்ளை:

# விவசாய கூலி வீட்டின் பூட்டை உடைத்து 14 சவரன் நகை, ரூ.56 ஆயிரம் ரொக்கம் அபேஸ்

சேத்துப்பட்டு, செப்.14:

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு அருகே வீட்டின் பூட்டை உடைத்து 14 சவரன் நகைகள், வெள்ளிப் பொருட்கள் மற்றும் ரூ.56 ஆயிரம் ரொக்கம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கொள்ளையில் ஈடுபட்ட மர்ம நபர்களை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

சேத்துப்பட்டு அடுத்த தச்சாம்பாடி மதுரா பாண்டியாபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் கண்ணப்பன் மனைவி சின்னக்குழந்தை. கணவர் இறந்த நிலையில், 2 மகள்கள் மற்றும் ஒரு மகனுடன்வசித்து வரும் இவர், விவசாய கூலி வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில், சம்பவத்தன்று பிற்பகல் 3 மணியளவில் சின்னக்குழந்தை வீட்டை பூட்டிவிட்டு விவசாய கூலி வேலைக்கு சென்றுள்ளார். பின்னர் மாலை 5 மணியளவில் வீடு திரும்பியபோது, வீட்டின் முன்பக்க கதவு பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இதையடுத்து வீட்டுக்குள் சென்று பார்த்தபோது, அங்கிருந்த 2 பீரோக்களின் பூட்டுகளும் உடைக்கப்பட்டிருந்தன. பீரோக்களில் வைத்திருந்த நகைகள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.





கொள்ளை போன நகைகளில் 4 சவரன் இரட்டை வடம் செயின், 4 சவரன் தாம்பு செயின், 1 சவரன் பிராஸ்லெட், 1½ சவரன் டாலர் செயின், கால் சவரன் வீதம் 3 நகைகள், 1½ சவரன் மதிப்பிலான 6 மோதிரங்கள், 2¾ சவரன் கம்மல் ஆகியவை அடங்கும். மொத்தம் 14 சவரன் நகைகள் கொள்ளை போயுள்ளன. மேலும், வெள்ளி கால் செயின், அருணாக்கயிறு உள்ளிட்ட வெள்ளிப் பொருட்களும், ரூ.56 ஆயிரம் ரொக்கமும் திருடு போயுள்ளன.

இது குறித்து சின்னக்குழந்தையின் மகன் ரவி சேத்துப்பட்டு போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் குணபாலன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, வீட்டில் பதிவாகியிருந்த கைரேகைகள் சேகரிக்கப்பட்டதுடன், கொள்ளையர்களின் நடமாட்டம் மற்றும் விட்டுச் சென்ற தடயங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையே, கொள்ளை சம்பவத்துக்கு முன்பு அந்த கிராமத்தில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் இருசக்கர வாகனத்தில் சுற்றித்திரிந்ததாகவும், கொள்ளைநடந்த வீட்டின் அருகே கார் ஒன்று நீண்ட நேரம் நின்றிருந்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்த தகவல்களையும் போலீசார் சேகரித்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், அப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் கொள்ளையர்களின் உருவம் அல்லது வாகனத்தின் பதிவுகள் பதிவாகியுள்ளதா என்பது குறித்தும் போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த சேத்துப்பட்டு போலீசார், பட்டப்பகலில் வீட்டின் பூட்டை உடைத்து நகை, பணத்தை கொள்ளையடித்துச் சென்ற மர்ம நபர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



# மேகமலை மற்றும் கடமலைமயிலை பகுதி மக்களை பாதிக்கும் உச்சநீதிமன்ற தீர்ப்பை மறுசீலனை செய்யக்கோரி மெய்வழி மக்கள் இயக்கம் சார்பில் வால்போஸ்டர்

மேகமலை மற்றும் கடமலைமயிலை ஒன்றிய பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்கள் உட்பட அனைத்து பொதுமக்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் வகையிலான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை உடனடியாக மறுசீலனை செய்ய வலியுறுத்தியும், மத்தியமாநில அரசுகள் மக்களின் நலனைகருத்தில்கொண்டு விரைவாகஉரியகொள்கை முடிவு எடுக்க வலியுறுத்தியும் மெய்வழி மக்கள் இயக்கம் மற்றும் மெய்வழி சட்ட மையத்தின் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மெய்வழி மக்கள் இயக்கம் மற்றும் மெய்வழி சட்ட மையத்தின் நிறுவன தலைவர் வழக்கறிஞர் வேதம் ஆர். சந்திர போஸ் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தேனி மாவட்ட தலைவர் வழக்கறிஞர் செல்வலட்சுமி அவர்கள் அப்பகுதி பொதுமக்களையும் பழங்குடியின மக்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும், பொதுமக்களின் உரிமைகளை பாதுகாக்கவும், அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் மெய்வழி மக்கள் இயக்கம் மற்றும் மெய்வழி சட்ட மையத்தின் சார்பில் போர்க்கால அடிப்படையில் கண்டன வால்போஸ்டர்கள் ஒட்டப்பட்டு, அப்பகுதியில் தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# தேனி மாவட்ட ஆட்சியரின் அலட்சியத்தால் வீடுகளுக்குள் புகுந்த பாதாள சாக்கடை கழிவுநீர்

## தொற்றுநோய் அபாயத்தால் சின்னமனூர் மக்கள் பீதி

தேனி,செப்.15

தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சியில் நிர்வாக சீர்கேடுகளும் பராமரிப்பின்மையும் நாளுக்கு நாள் எல்லை மீறி வரும் நிலையில் குடியிருப்பு வீடுகளுக்குள் பாதாள சாக்கடை கழிவுநீர் புகுந்து மக்கள் பெரும் அச்சத்தில் உறைந்துள்ளனர் கடந்த ஆகஸ்ட் 1ஆம் தேதி சின்னமனூர் ராதாகிருஷ்ணா ரைஸ் மில் தெருவில் மணல் லாரி ஒன்று வீட்டின் வாசல் முன்பாக சாய்ந்ததில் ஏற்கெனவே முறையாக பராமரிக்கப்படாமல் இருந்த பாதாள சாக்கடை குழாய் உடைந்தது. இதை சீரமைப்பதில் நகராட்சி நிர்வாகம் காட்டிய கடும் மெத்தனப் போக்கால் அப்பகுதியில் சாக்கடை கழிவுநீர் தேங்க தொடங்கியது. மேலும், நகராட்சியால் அமைக்கப்பட்ட சாக்கடை மேம்பால பணிகளும் தரம் குறைந்தும் முறையின்றியும் மேற்கொள்ளப்படாதால் கழிவுநீர் செல்வதில் பெரும் அடைப்பு ஏற்பட்டது.






இந்நிலையில் விநாயகர் சதுர்த்தி நாளன்று பெய்த கனமழையின் காரணமாக பாதாள சாக்கடை மற்றும் சாக்கடை கழிவுநீர் வெளியேற வழியின்றி மக்களின் குடியிருப்பு வீடுகளுக்குள் புகுந்தது வீடுகளுக்குள் நாற்றமடிக்கும் கழிவுநீர் சூழ்ந்துள்ளதால் குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு கொடூரமான தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சின்னமன்னூர்நகராட்சியில் கடந்த 60 நாட்களுக்கும் மேலாக நிரந்தர ஆணையாளர் இல்லாததும், பொறுப்பு ஆணையாளராக உள்ள உமாசங்கர் மக்களின் புகார்களை கண்டுகொள்ளாமல் அலட்சியம் காட்டி வருவதுமே இத்தகைய அவலங்களுக்கு முக்கிய காரணமாகும் ஓடை தெருவில் மாதக்கணக்கில் தூர்வாரப்படாத சாக்கடைகள், அண்ணாமலை நகர் போன்ற குடியிருப்பு பகுதிகளில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்து வருவது, பூட்டிக்கிடக்கும் பொதுக் கழிப்பறைகள் மற்றும் பராமரிப்பற்ற பூங்காக்கள் என நகரம் முழுவதும் சுகாதார சீர்கேடு ஏற்கனவே உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

நகராட்சி நிர்வாகத்தின் தொடர் முறைகேடுகளையும் பொதுமக்கள் சந்திக்கும் துயரங்களையும் ஊடகங்கள் வாயிலாக தொடர்ந்து செய்திகளாக வெளியிட்டும், தேனி மாவட்ட ஆட்சியர் எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் நகராட்சியை முற்றிலுமாக கைவிட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். வரி வசூலிப்பதில் மட்டும் சட்டப்படி தீவிரமாக செயல்படும் நகராட்சி அதிகாரிகளும் மாவட்ட நிர்வாகமும், மக்களின் உயிருக்கும் ஆரோக்கியத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படும்போது பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதாக மக்கள் கடும் ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர். ஊடகச் செய்திகளின் அடிப்படையிலாவது மாவட்ட ஆட்சியர் உடனடியாக தலையிட்டு, பாதிக்கப்பட்ட வீடுகளை நேரில் ஆய்வு செய்ய வேண்டும் என்றும், கடமை தவறிய அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, மக்களை தொற்றுநோய் அபாயத்திலிருந்து பாதுகாக்க உடனடியாக சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் சின்னமனூர் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# நல்லூர் ஊராட்சியில் பள்ளம் மேடான சாலையை சரி செய்த தவெக நிர்வாகி எம்.கார்த்திக்

செங்குன்றம், செப்டம்பர் 15:

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சி பாலமுருகன் நகர் 11வது தெருவில் அண்மையில் பெய்த மழையால் மழைநீர் தேங்கியதோடு, பள்ளம் மேடான சாலையை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத அளவிற்கு மாறியது.

இதனால் பொதுமக்கள் இச்சாலையை பயன்படுத்த மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம், சோழவரம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சி தவெக நிர்வாகி எம்.கார்த்திக்கை நேரிடையாக சந்தித்து,

இத்தெருவை சரி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர். தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எம். எல். விஜய் பிரபு வழிகாட்டுதலின்படி பொதுமக்களின் கோரிக்கையை உடனடியாக ஏற்று தவெக நிர்வாகி எம்.கார்த்திக் பள்ளம் மேடான தெருவில் ரப்பீஸ் உள்ளிட்ட பொருள்களை நிரப்பி, ஜெபிசி இயந்திரம் மூலம் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சரி செய்து கொடுத்தார். இச்செயலை இப்பகுதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் வெகுவாகப் பாராட்டினர்.


# கூட்டாம்புளியில் தவெக தூத்துக்குடி மாநகர தெற்கு பகுதி செயலாளர் பொன்முருகன் இல்ல திருமண விழா; சிறு குறு தொழில் துறை அமைச்சர் மதன் ராஜா கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்

தூத்துக்குடி,செப்.15

கூட்டாம்புளியில் தவெக தூத்துக்குடி மாநகர தெற்கு பகுதி செயலாளர் பொன்முருகன் இல்ல திருமண விழாவில் சிறு குறு தொழில் துறை அமைச்சர் மதன் ராஜா கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்

தூத்துக்குடி புறநகர் மாவட்டத்துக்குட்பட்ட மாநகர தெற்கு பகுதி தவெக செயலாளர் பொன்முருகன், இல்ல திருமண விழா கூட்டாம்புளியில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு சிறு குறு தொழில்துறை அமைச்சர் மதன் ராஜா கலந்து கொண்டு மணமக்களைபல்லாண்டு காலம் வாழ வாழ்த்தினார்,



இந்நிகழ்ச்சியில்அமைச்சரின் நேர்முக உதவியாளர் கல்யாணசுந்தரம், தவெக கழக நிர்வாகி வினோத் குமார், மாநகர பகுதி இணைச்செயலாளர் முத்துக்குமார், தெற்கு ஒன்றிய செயலாளர் குழந்தைராஜ், மாநகர் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் மணிகண்டன், கிளைச் செயலாளர் பால்ராஜ், உட்பட ஏராளமானோர் திருமண விழாவில் கலந்துகொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் 55வது காவல் கண்காணிப்பாளராக அன்ஷுல்நாகர் IPS அவர்கள் 12.09.2026 ல் பொறுப்பேற்றுக்கொண்டார். திருநெல்வேலி மேற்கு துணை ஆணையராக பணியாற்றி வந்த அவர், நாகர்கோவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனது முதல் கோப்பில் கையெழுத்திட்டு பணியை தொடங்கினார்.



Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA